அரசு செயலாளர் /மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் (முகூபொ) அவர்களின்
செயல்முறை நடவடிக்கைகள், சென்னை–5
பிறப்பிப்பவர் : திரு. R. லால்வேனா, இஆப.,

ந.க.எண். 11202/நிர்–2/2021 நாள் : 07.01.2022

பொருள் : பணியமைப்பு – மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரக சென்னை–5 – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தொகுதி IVல் தேர்வு செய்யப்பட்டு, புதுக்கோட்டை மாவட்ட செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளியி இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. மு. விக்னேஸ் என்பவருக்கு, இளநிலை உதவியாளர் பதவியில் தற்காலிக பஎ 03.08.2020 மு.ப. பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது

பார்வை : 1.செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண். 2500/PSD–I/2020, நாள் : 26.05.2020.

2.மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் சென்னை–5 அவர்களின் ந.க.எண். 4796/நிர்–2/2020, நாள்: 31.07.2020.

-------

ஆணை :

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி (IV) ( 2018–2019 மற்றும் 2019 – 2020) ல் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2ல் காணும் 31.07.2020 நாளிட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரக செயல்முறை ஆணையின்படி புதுக்கோட்டை மாவட்டம், செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 03.08.2020 மு.ப. பணியில் சேர்ந்து, பணிபுரிந்து வரும் திரு.மு.விக்னேஷ், என்பவருக்கு பணியில் சேர்ந்த நாளான 03.08.2020 மு.ப. முதல் பார்வை 1ல் காணும் 26.05.2020 நாளிட்ட செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதத்தில் பத்தி 5ல் தெரிவித்துள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination – IV for the year 2018-2019 and 2019-2020."**

2) மேற்படி பணியாளர் பணியில் சேர்ந்த நாளான 03.08.2020 மு.ப. மூன்றாண்டு தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண் பருவக்காலத்தில் மேற்படி தனியர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

- அலுவலக நடைமுறை நூல் (D.O.M )
- இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சி

4) மேலும் மேற்காணும் பணியாளருக்கு தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசு பணியாளர்களின் (பணிநிபந்தனைச்சட்டம்) 2016 (தமிழ்நாடுசட்டம் 14/2016) பிரிவு 28(1)–ன் தனியர் பணியேற்ற நாள் முதல் 03.08.2020 மு.ப. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(ஒம்/–) R. லால்வேனா
அரசு செயலாளர்/மாற்றுத்திறனாளிகள்
நல இயக்குநர் (முகூபொ)

பெறுநர்
திரு. மு.விக்னேஷ்,
இளநிலை உதவியாளர்,
செவித்திறன் குறையுடையோருக்கான
அரசு நடுநிலைப்பள்ளி,
புதுக்கோட்டை

நகல்:
1.தலைமை ஆசிரியர்,
செவித்திறன் குறையுடையோருக்கான
அரசு நடுநிலைப்பள்ளி,
புதுக்கோட்டை
2. இ.கோ./உதிரி.

// ஆணைப்படி //

இணை இயக்குநர் (முகூபொ)

7/1/2022

தலைமை ஆசிரியர்,
செவித்திறன் குறையுடையோர்க்கான